DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 165/2024** Date: 03.04.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 5**

Name : M. முருகேசன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.04.2025.

முதல் விசாரணை :–

1. நான் உதவி வேளாண்மை அலுவலராக பென்னாகரம் பகுதியில் பணிபுரிந்துவருகிறேன். எனது பணியானது விவசாய நிலத்திற்கு சென்று விவசாய நிலத்தில் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்பதை கண்டறிந்து அதனை வருவாய்துறையிலுள்ள பதிவேட்டில் அதுகுறித்து பதிவுசெய்வதாகும். 2019 டிசம்பர் மாதம் PM KISSAN திட்டம் வருவாய்துறையிடமிருந்து எங்களது துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திட்டத்தில் அனுமதி வழுங்கப்படும் விண்ணப்பங்கள் அதிகளவில் நிலுவையில் இருந்தது. தித்தியோப்பனஅள்ளி, வட்டுவனஅள்ளி, ஓ.ஜீ.அள்ளி, சிகரலள்ளி, அஞ்சேஅள்ளி, ரங்காபுரம், காட்டுநாயக்கனஅள்ளி ஆகிய பகுதிகளில் நான் களப்பணியை செய்துவந்தேன்.

2. வேளாண்மை இணைஇயக்குநர் எங்களுக்கு நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை விரைவாக முடிக்கவேண்டி அறிவுறுத்தினார். எனவே

தொலைபேசி மூலமும், நேரடியாகவும் சென்றும் விண்ணப்பதாரர்களிடம் விபரங்களை கேட்டறிந்தோம். 1526 விண்ணப்பங்கள் அனுமதிக்காக நிலுவையில் இருந்தது. மேற்படி விண்ணப்பங்கள் குறித்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் விசாரித்தபோது 1483 விண்ணப்பங்கள் தகுதியற்ற விண்ணப்பங்கள் என தெரியவந்தது. 43 விண்ணப்பங்கள் தகுதியானதாக இருந்தது. கம்பியூட்டர் ஆப்பரேட்டராக இருந்த மீனா என்பவர் விண்ணப்பங்களை சரிபார்த்து பதிவேற்றம் செய்தார். தகுதியான விவசாயிகளின் விண்ணப்பங்களுக்கு அனுமதியளிக்கும் பணியையும் மீனா செய்துவந்தார். பின்னிட்டு CBCID அலுவலகத்திலிருந்து OTP எண் தனியார் கணினி சேவைமையத்திற்கு மீனா என்பவர்கொடுத்ததாக தெரிவித்திருந்தனர்.

3. தகுதியற்ற விவசாயிகளுக்கும் மீனா என்பவர் அனுமதி வழங்கியுள்ளதாக CBCID அலுவலகத்திலிருந்து எனக்கு தெரிவித்தனர். 22.10.2022 ம் தேதி மதியம் 3.00 மணியளவில் துணைவேளாண்மை அலுவலகம், பாப்பாரப்பட்டியிலிருந்து CBCID காவல் ஆய்வாளர் அவர்கள் கருப்புநிற HP model CPU ஒன்றினை கேபிளுடன் கைப்பற்றினார்கள். அப்போது நானும், புவனேஷ்வரி, வேளாண்மை உதவி இயக்குனர் அவர்களும் உடனிருந்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் CPU யைதான் போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் 22.10.2020 ம் தேதியிட்ட படிவம் 91 ல் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். (**Black color HP model – CPU (S No. INA 643XK8C along with Harddisk) –1 அ.சா.பொ.1 ஆகவும், 22.10.2020 ம் தேதியிட்ட படிவம் 91 ல் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**குறுக்குவிசாரணை**</u> – (எதிரிகள்தரப்பில்)

1. டேட்டாஎன்றி பதிவுசெய்யப்படவேண்டும் என்றால் OTP எண் தேவைப்படும் என்றால் சரிதான். OTP எண் எங்களது அலுவலகத்திலுள்ள அனைவருக்கும் தெரியவரும் என்றால் சரியல்ல, வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் கணினி இயக்குனர் ஆகியோருக்கு மட்டும் தெரியவரும். OTP எண் whatsapp group மூலம் பகிறப்படும் என்றால் சரிதான். நாங்கள் களப்பணிக்கு சென்று கூறுவதை மீனா பதிவேற்றம் செய்வார் என்றால், நாங்கள் கூறுவதை பதிவேற்றம் செய்வார், அவராகவும் பதிவேற்றம் செய்வார். மீனா என்பவர் அலுவலகத்தில் கொடுக்கும் வேலையை அவராக பதிவேற்றம் செய்வார் என்றால் சரிதான். பயனாளிகள் கொடுத்த தகவல்களை மீனா பதிவேற்றம் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரி மீனா

பயனாளிகள் மற்றும் அலுவலகத்தில் கொடுக்கப்படும் பணிகளை மட்டுமே செய்துவந்தார் என்றால் சரியல்ல.

2. OTP எண் தெரிந்தால் அதனைவைத்து தனியார் கணினி சேவைமையத்திலும் பதிவேற்றம் செய்யமுடியும் என்றால் சரிதான். எதிரி மீனா என்பவருக்கு விண்ணப்பங்களை சரிபார்க்கம்பணி வழங்கப்படவில்லை என்றால், வேளாண்மை உதவி இயக்குநர் விண்ணப்பம் சரிபார்க்கும் பணியை எதிரி மீனாவிற்கு கொடுத்திருந்தார். எனக்கு மற்றும் மீனா ஆகியோருக்கு எத்தனை விண்ணப்பங்கள் தனித்தனியாக சரிபார்க்க கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. எதிரி மீனாவிற்கு விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பணி வழங்கப்பட்டதாக புகார் மற்றும் போலிசார் பதிவுசெய்த எனது வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பாப்பாரப்பட்டி வேளாண்மை அலுவலகத்தில் ஒரு கணினி மட்டும் இருந்தது. மேற்படி ஒரு கணினியில் மட்டும்தான் அனைத்து அலுவலக பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றால் சரிதான். மற்ற அலுவலர்களும் மேற்படி கணினியை பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். தவறான விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யப்பட்டது எதிரி மீனா இல்லை என்றாலும், எங்களது அலுவலகத்தில் பணிபுரியும் மற்ற நபர்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் யாரோ செய்த தவறுக்கு எதிரிகள்மீது தவறான வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. போலிசார் என்னை 22.10.2020 ம் தேதி எனது அலுவலகத்தில்வைத்து விசாரித்தனர். எனது மேலதிகாரி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.